Human Resources and Skills Development Canada | Ressources humaines et Développement des compétences Canada

# இப்போதும் நாளையும்

# நாங்கள் ஆற்றும் பணிகள் அனைத்திலும் சிறந்து விளங்குதல்

## கனடா கல்விச் சேமிப்புத் திட்டம்

[Canada Education Savings Program \
Programme canadien pour l'épargne-études]

## உகந்த பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டத்தை தெரிவுசெய்தல்

**CANLEARN.CA / CIBLETUDES.CA**

Canada

உயர் பாடசாலைக் கல்வியை அடுத்து உங்கள் பிள்ளையின் கல்விக்கு நிதியுதவி புரிய நீங்கள் ஒரு பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டத்தை [Registered Education Savings Plan (RESP) / Régime enregistré d'épargne-études (REEE)] துவக்க எண்ணுகிறீர்களா? அதற்கான செய்முறையை இத்துண்டுப்பிரசுரம் உங்களுக்கு காட்டித்தரும்.

## பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் என்றால் என்ன?

பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் [RESP) / REEE] என்பது கனடிய அரசாங்கத்திடம் பதிவுசெய்த கல்விச் சேமிப்புக் கணக்காகும். பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் ஒன்றைக் கொண்டு பின்வருவன போன்ற வேறு மானியங்களையும், உதவிப்படிகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்:

- கனடா கற்கை முறி [Canada Learning Bond (CLB) / Bon d'études canadien (BEC)];
- கனடா கல்விச் சேமிப்பு அடிப்படை மற்றும் மேலதிக மானியம் [Basic and Additional Canada Education Savings Grant / Subvention canadienne pour l'épargne-études de base et supplémentaire]
- மாகாணக் கல்விச் சேமிப்பு ஊக்கத்தொகை(அல்பேர்ட்டா மற்றும் கியூபெக் மட்டும்)

## பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்க முன்வரும் தரப்புகள் எவை?

பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்கும் தரப்புகளாவன: நிதி நிறுவனங்கள் (வங்கிகள் அல்லது கூட்டுறவு நிதியகங்கள் போன்றவை), ~~அல்லது~~ சான்றிதழ் பெற்ற நிதித் திட்டவாளர்கள் அல்லது குழுமத் திட்டம் வழங்குவோர்.

## பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்கும் தரப்பு ஒன்றைத் தெரிவுசெய்யும் பொழுது நான் எவற்றை அறிந்திருக்க வேண்டும்?

பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட வழங்குதரப்புகளுள் [RESP provider / fournisseur de REEE] உங்கள் தேவைகளுக்கு மிகவும் உகந்த தரப்பைத் தெரிவுசெய்வது முக்கியம்.

உங்களுக்கு உகந்த பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட வகையைத் தெரிவு செய்வதில், உங்கள் பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்ட வழங்குதரப்பினால் உதவ முடியும்.

பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்கும் தரப்புகள் சில தமது சேவைகளுக்கு அல்லது தாம் மேற்கொள்ளும் முதலீடுகளுக்கு கட்டணம் செலுத்தும்படி உங்களிடம் கேட்கலாம். வேறு தரப்புகள் நீங்கள் செலுத்தவுள்ள கட்டணங்கள், அத்துடன்/அல்லது உங்கள் பிள்ளை தனது பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் மூலம் பெறும் நன்மைகள் மீது நிபந்தனைகள் விதிக்கலாம்.

## உங்களுக்கு பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்கும் தரப்பிடம் நீங்கள் கேட்கவேண்டிய கேள்விகள்

- நீங்கள் கனடா கற்கை முறி, மற்றும் கனடா கல்விச் சேமிப்பு மேலதிக மானியம் [Additional Canada Education Savings Grant / Subvention canadienne pour l'épargne-études supplémentaire], அல்லது அல்பேர்ட்டா அல்லது கியூபெக் மாகாண கல்விச் சேமிப்பு ஊக்கத்தொகை வழங்க முன்வருகிறீர்களா?

- எவ்வகையான பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டங்களை நீங்கள் வழங்க முன்வருகிறீர்கள் (குடும்பத்துக்கானவை, தனியொருவருக்கானவை, குழுமத்துக்கானவை)? வேறுபாடுகள் எவை?

- எத்தகைய முதலீட்டு வகைகளை நீங்கள் வழங்க முன்வருகிறீர்கள்? எனது பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டத்தை நான் வைத்திருக்கும் அதே வேளையில் வேறொரு வகை முதலீட்டுக்கு நான் மாற முடியுமா? மிகவும் பத்திரமான முதலீட்டு வகை எது?
  - பின்வருவனவற்றுக்கு நான் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதா:
  - பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கு ஒன்றைத் திறத்தல்?
  - எனது பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கிலிருந்து பணம் எடுத்தல்?
  - எனது பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டத்தை நிர்வகித்தல்?
  - சேவைகள், தரகுகள்?

  அப்படி என்றால், ஒவ்வொரு கட்டணமும் எவ்வளவு, கட்டணம் செலுத்துவது எப்பொழுது?

- கட்டணங்களை என்னால் மேற்கொண்டு ஒழுங்காகச் செலுத்த முடியாவிட்டால், என்ன நடக்கும்?

- உயர் பாடசாலைக் கல்வியை அடுத்த கல்வித்திட்டங்களுள் உங்கள் திட்டத்திலிருந்து தவிர்க்கப்பட்டவை எவை?

- உயர் பாடசாலைக் கல்வியை அடுத்து எனது பிள்ளை தனது கல்வியைத் தொடராவிட்டால் என்ன நடக்கும்?

- எனது பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டக் கணக்கை நான் முன்கூட்டியே முடித்துக்கொள்ள நேர்ந்தால், நான்:
  - கட்டணங்கள் அல்லது தண்டங்கள் செலுத்த நேருமா?
  - திட்டத்துக்கு நான் கொடுத்துதவிய பணத்தை மீளப் பெறுவேனா?
  - பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் மூலம் ஈட்டிய வட்டியை இழப்பேனா?
  - வேறு வகையான பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டத்துக்கு அல்லது பதிவு முதலீட்டு வகைக்கு மாற இயலுமா?

## உங்கள் பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டத்தை துவக்கும் ஒப்பந்தத்தில் நீங்கள் ஒப்பமிட முன்னர்

உங்களுக்கு பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்கும் தரப்பிடம் சம்பந்தப்பட்ட விபரங்கள் அனைத்தையும் எழுத்தில் தரும்படி கேட்கவும்.

உங்களுக்கு பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்கும் தரப்பு, மாகாண கல்விச் சேமிப்பு ஊக்கத்தொகை வழங்க முன்வருவதை உறுதி செய்யவும் (அல்பேர்ட்டா மற்றும் கியூபெக் மட்டும்).

ஆவணங்கள் அனைத்தையும் வாசித்துப் பார்க்கவும். விபரங்களில் (கட்டணங்கள், தண்டங்கள், தரகு, கல்வி உதவிக் கட்டணங்கள் என்பவற்றில்) கவனம் செலுத்தவும். உங்களுக்கு ஏதாவது விளங்காவிட்டால், ஒப்பமிட வேண்டாம். விளக்கமளிக்கும்படி, உங்களுக்கு பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்கும் தரப்பிடம் கேட்கவும்.

போதிய நேரத்தைப் பயன்படுத்தி, வெவ்வேறு வகையான (குடும்பத்துக்கான, தனியொருவருக்கான, குழுமத்துக்கான) பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டங்களின் பயன்களையும் பாதிப்பு விளையும் வாய்ப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவும். நீங்கள் ஒரு தீர்மானத்துக்கு வருமுன்னர் எல்லா விபரங்களையும் மீள்நோக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.

## ஒப்பந்தத்தில் ஒப்பமிட்ட பின்னர்

ஒப்பமிட்ட ஆவணங்கள் அனைத்துக்கும் ஒரு பிரதி வைத்திருக்கவும்.

கனடா கல்விச் சேமிப்பு அடிப்படை மற்றும் மேலதிக மானியம், கனடா கற்கை முறி என்பவற்றுக்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதில் உங்களுக்கு உதவும்படி உங்களுக்கு பதிவுக் கல்விச் சேமிப்புத் திட்டம் வழங்கும் தரப்பிடம் கேட்கவும். இவை ஒவ்வொன்றுக்கும் நீங்கள் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

## நான் எங்கே உதவி அல்லது மேலதிக விபரங்கள் பெறலாம்? (ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் மட்டும்)

1 800 O-Canada (1-800-622-6232)

TTY/ATS (தொலைத்தட்டெழுத்துப்பொறி): 1-800-926-9105

CanLearn.ca (ஆங்கிலம்) அல்லது Cibletudes.ca (பிரெஞ்சு)

உங்களுக்கு அருகிலுள்ள கனடா சேவை நிலையம் [Service Canada Centre / Centre service Canada]

கனடா அரசிறை (வருவாய்) முகமை
[Canada Revenue Agency / Agence du revenu du Canada]
தனிநபர் வருமான வரி விசாரிப்புகள்
1-800-959-8281
www.cra-arc.gc.ca

கனடா நிதி நுகர்வோர் முகமை [Financial Consumer Agency of Canada / Agence de la consommation en matière financière du Canada]
1-866-461-3222
www.fcac.gc.ca / www.acfc.gc.ca

பின்வரும் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு இந்த வெளியீட்டை நீங்கள் தருவிக்கலாம்:

**வெளியீட்டுச் சேவை**
**மனித வளங்கள் மற்றும் திறன்கள் மேம்பாடு கனடா**

**Publishing Services / Services des publications**
**Human Resources and Skills Development Canada / Ressources humaines et Développement des compétences Canada**
140 Promenade du Portage
Portage IV, 12th Floor
Gatineau, Québec
K1A 0J9

தொலைநகல்: 819-953-7260

இணையத்தளம்: **http://www12.hrsdc.gc.ca (ஆங்கிலம்) அல்லது**
**http://www12.rhdcc.gc.ca (பிரெஞ்சு)**

1 800 O-Canada (1-800-622-6232) என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, இந்த ஆவணத்தை நாடிக் கோரிக்கை விடுத்தால், இது மாற்று வடிவங்களில் (பெரிய அச்செழுத்திலோ, தொடுகை அச்செழுத்திலோ, ஒலிப்பேழையிலோ, இறுவட்டிலோ, மின்ம உரை வட்டிலோ, மின்ம உரை இறுவட்டிலோ, DAISY உருவிலோ) கிடைக்கும். நீங்கள் தொலைத்தட்டெழுத்துப்பொறி (TTY/ATS) பயனபடுத்துபவர் என்றால் 1-800-926-9105 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

© பதிப்புரிமை: கனடாவின் ஆட்சியாளர் என்ற வகையில் மாட்சிமை தங்கிய அரசி, உ0கக